இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 153 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மார்கழி 28 – திங்கள்கிழமை 12 ஜனவரி 2026 – வெளியூர் 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 153 : Thiruvalluvar Year - 2056 - Margazhi 28 - Monday 12 January 2026 - Dak 16 Pages ₹ 5.00




# அயலகத் தமிழர் தினம் 2026!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று நடைபெறுகிறது!



**சென்னை, ஜன. 12 -**

**‘அயலகத் தமிழர் தினம் - 2026’ தமிழால் இணைவோம், தரணியில் உயர்வோம் என்ற எழிலார்ந்த நிகழ்ச்சி நேற்று சென்னை நந்தம் பாக்கம் வர்த்தக மையத்தில் தொடங்கியது. இதில் அமைச்சர் துரைமுருகன், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.**

**தொடர்ந்து இன்று நடைபெறும் அயலகத் தமிழர் தினம் - 2026 நிகழ்ச்சிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று சிறப் புரையாற்றுகிறார். இவ்விழாவில் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் உள்பட அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் வெளிநாடுவாழ் தமிழ்ப் பெருமக்கள், அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.**

தமிழ்நாடு அரசின் சார்பில் “அயலகத் தமிழர் தினம் 2026” கொண்டாட்டங்களை மிகச் சிறப் பான முறையில் நடத்துவது குறித்த ஆய்வுக் கூட் டம் அமைச்சர் சா.மு. நாசர் தலைமையில் தலை மைச் செயலகத்தில் கடந்த டிச. 30ஆம் தேதியன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அமைச்சருடன் இணைந்து, அயலகத் தமிழர் நல வாரியத் தலைவர் கார்த்தி கேய சிவசேனாபதி, துறை சார்ந்த உயர் அதிகாரிகளும் பங்கேற்றனர்.

துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரிஷ் தக்கர், ஆணையர் முனைவர் மா.வள்ளலார், அரசு கூடுதல் செயலாளர் மு. பாலசுப்பிரமணி யம், வாரிய உறுப்பினர்கள் ஜி.வி. ராம், சுபைர் கான் மற்றும் இதர உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் உலகெங்கிலும் பரவி வாழும் தமிழ் மக்களின் நலன்களைப் பாதுகாக்கவும், அவர்களைத் தாயகத்துடன் இணைக்கவும் “அயலகத் தமிழர் தினம் 2026” குறித்த முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

விழாவைச் சர்வதேச அளவில் கவனத்தை ஈர்க்கும் வகையில் பிரம்மாண்டமாக நடத்துவது குறித்தும், புலம்பெயர் தமிழர்களுக்கான புதிய நலத்திட்டங்கள் மற்றும் முதலீட்டு வாய்ப்புகள் குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டது.

### அமைச்சர் துரைமுருகன் - துணை முதல்வர் பங்கேற்பு!

இந்நிலையில் ‘அயலகத் தமிழர் தினம் - 2026’ தமிழால் இணைவோம், தரணியில் உயர்வோம் என்ற எழிலார்ந்த நிகழ்ச்சி நேற்று சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் தொடங்கியது. இதில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு நிகழ்ச் சியை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

தொடர்ந்து, சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் அமைச்சர் சா.மு.நாசர் முன்னிலை யில் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ் வுத்துறையின் சார்பில் “தமிழால் இணைவோம், தரணியில் உயர்வோம்” என்ற தலைப்பில் நடைபெற்ற அயலகத் தமிழர் தினம் 2026 விழா வினையொட்டி அமைக்கப்பட்ட கண்காட்சி அரங்கத்தினை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலை யில், நீர்வளத்துறை அமைச்சர் துரை முருகன் அவர்கள் திறந்து வைத்தார்.

இதில் அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

### வெளிநாட்டு அமைச்சர்கள் பங்கேற்பு!

இதனைத் தொடர்ந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று காலை 10 மணி அளவில் சென்னை வர்த்தக மையத்தில் “அயலகத் தமிழர் தினம் 2026” விழாவிற்கு தலைமையேற்று சிறப்புரையாற்றுகிறார்.

இவ்விழாவில் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் உள்பட அமைச்சர் பெரு மக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் மொரீஷியஸ், கனடா, இலங்கை, மலேசிய நாடுகளின் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப் பினர்கள், வெளிநாடு வாழ் தமிழ்ப் பெரு மக்கள், அரசு அதிகாரிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.


